பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 26 | வியாழக்கிழமை | 11.01.2024 | அதிர்வு 163

## மட்டக்களப்பு வாவியில் குடும்பஸ்தரின் சடலம்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாந்தீவு வாவியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை படகில் மீன்பிடிக்கச் சென்ற மேற்படி நபர் இரண்டு நாள்களின் பின்னர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வவுணதீவு 06▶



### தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் யார்?

# மூன்று வேட்பாளர்களும் தனியே பேசி தீர்மானம் எடுக்க ஒரு நாள் அவகாசம்

## திட்டமிட்டபடி 28 இல் மாநாடு நடைபெறும் என்று அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைப் போட்டியின்றி தெரிவு செய்வதற்காக மூன்று வேட்பாளர்களும் தமக்குள் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க ஒரு நாள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே திட்டமிட்டபடி தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை எதிர்வரும் 21 ஆம் திகதியும், தேசிய மாநாட்டை 28 ஆம் திகதியும் நடத்தவும் கட்சியின் நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. 06▶

## பருத்தித்துறையில் பஸ் உரிமையாளர் மீது முகமூடிக் கும்பல் வாள்வெட்டுத் தாக்குதல்

### தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு



(எஸ்.நிதர்ஷன்)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த பஸ் உரிமையாளரும் சாரதியுமான தேவகுமார் என்ற குடும்பஸ்தர் 06▶



தமிழரசுக் கட்சியின் உத்தேச தேசிய மாநாட்டை தள்ளி வைப்பதன் மூலம் கட்சித் தலைவராகத் தாமே இன்னும் கொஞ்ச நாள்களுக்குத் தொடர்ந்து நீடிப்பதற்கு அதன் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா நேற்று திருகோணமலையில் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தில் 'தலைகீழாக' நின்று பார்த்தார். ஆனால் யாரும் அவரது அந்தக் கோரிக்கையையோ அவரது பேச்சையோ 06▶

# பொது மக்களை ஏமாற்றுகின்ற விதமாகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சமர்ப்பிப்பு



## சிறிதரன் எம்.பி. சபையில் தெரிவிப்பு

**“பொது மக்களை ஏமாற்றும் விதமாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.”**

**- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“1978 ஆம் ஆண்டின் பயங்கரவாத எதிப்பு சட்டமூலத்தின் மூலம் எத்தனையோ யுவதிகள், இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இந்த சட்டத்தின் மூலம் பல்வேறு உயிர் இழப்புகள் ஏற்பட்டன.

யுத்த காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகிய தரப்பினருக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை.

இந்த நிலையில் மக்களுக்கு திருப்தி தராத இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தின் தேவை என்ன?

ஜனநாயகப் போராளிகளை முடக்கும் வகையிலேயே தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நலனுக்கு மதிப்பு கொடுக்காத தற்போதைய அரசாங்கம் சிவில் சட்டத்தை எவ்வாறு முறையான விதத்தில் நடைமுறைப்பப்படுத்தும் என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

இந்த நிலையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் இன்னும் பல விவாதங்கள் இடம்பெறவேண்டும்.” –என்றார்.



# சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் நிறைவேற்று அதிகாரி இலங்கையில்

சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிற்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெஃப் அலர்டைஸ் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

அவருக்கும் விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் மிகுந்த நம்பிக்கையுடன் கூடிய சந்திப்பாக இது அமைந்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதனிடையே, ஜெஃப் அலர்டைஸ்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றிலிருந்து மண்ணெண்ணெய் கசிவு: முல்லைத்தீவு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**(ந.லோகதயாளன்)**

முல்லைத்தீவில் மண்ணெண்ணெய் கலந்திருப்பதாகக் கூறப்படும் கிணற்று நீரை கனியவள எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் கொடுத்து பரிசோதனை செய்து அதன் அறிக்கையை அடுத்த மாதம் (பெப்ரவரி 24ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

முல்லைத்தீவு, உடையார்கட்டு – குரவில் கிராமத்தில் கிணற்றில் இருந்து மண்ணெண்ணெய் கசிவது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

குரவில் கிராமத்தில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து நீருடன் மண்ணெண்ணெய் வெளியேறுவது தொடர்பில் வீட்டார் கிராம சேவகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். கிராம சேவகர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கிய நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதனை ஆராய்ந்த நீதிவான், இந்தக் கிணற்றின் நீரின் மாதிரியை எடுத்து கனியவள எண்ணெய் கூட்டுத்தாபனத்திடம் கொடுத்து பரிசோதனை செய்து அதன் அறிக்கையை எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டார்.

# நாட்டைக் கட்டியெழுப்ப கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைவது மிக அவசியம்

## வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

**“நாடு கண்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும். இதற்கான திட்டங்களை ஜனாதிபதி வகுத்துள்ளார். தற்போது நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள இந்த வேலைத் திட்டங்களுக்கு ஆளும், எதிர்கட்சி என்றபாகுபாடு இன்றி, அனைவரும் கரம்கோர்த்து செயற்படவேண்டும்.”**

**– இவ்வாறு வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது நாடு 2020 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக அடுத்தடுத்து இரண்டு பிரச்சினைகளைச் சந்தித்தது. முதலாவது, நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று. கொவிட் தொற்றிலிருந்து ஓரளவு மீண்டுவந்தபோது, மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் இவ்வாறான இரண்டு சவால்களை நாம் எதிர்கொண்டோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தால் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தற்போது நாம் ஓரளவு மீள் எழுந்து வருகின்றோம். என்றாலும் அது முழுமை பெறவில்லை. அது முழுமை பெற வேண்டுமாயின் நாம் இன்னும் கடுமையாகச் செயற்பட வேண்டும். அதற்காக ஜனாதிபதி பல திட்டங்களை வகுத்திருக்கின்றார். அரசாங்கம் என்ற வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும் மக்களின் வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட வேண்டும். ஒரு மரத்தை ஒரே நாளில் வெட்ட முடியும். ஆனால் அந்த மரத்தை உருவாக்க பல வருடங்கள் தேவைப்படும். அதேபோன்று தான் இந்த நாடு பொருளாதார ரீதியில் பாரிய வீழ்ச்சியைக் கண்டது. எனவே அதனை மீட்டெடுக்க காலம் தேவைப்படுகின்றது. ஒரே நாளில் ஒரு மரத்தை நட்டு ஒரே நாளில் அதன் பலனைப் பெற முடியாது. ஏதோ ஒரு வகையில் கடந்த 74 வருடங்களாக இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் விட்ட பிழைகள் மற்றும் தூர நோக்கற்ற சிந்தனை உண்மையில் இந்த நாடு மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்றது.

ஆகவே இந்த நேரத்திலே ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற பாகுபாடுகளை ஒரு பக்கம் வைத்து விட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இந்த நாட்டு மக்களுக்கான சேவையை, குறிப்பாக வாழ்க்கைச் சுமையைக் குறைக்கக்கூடிய விடயங்களை முன்னெடுக்கவும் நாட்டை மீட்டெடுக்கவும் நாங்கள் அனைவரும் கரம்கோர்த்துச் செயற்படவேண்டும். அதற்கான காத்திரபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் செயற்படுத்திக்கொண்டு வருகின்றது. அவ்வாறான நடவடிக்கைகள் எதிர்வரும் ஆறு மாத காலத்திற்குள் இன்னும் அதிகமாக முன்னெடுக்கப்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதென்பது இலகுவான விடயம். அதனை எல்லோராலும் செய்ய முடியும். ஆனால் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது என்பதுதான் கடினமான விடயம். ஆகவே நாம் பிரச்சினைகளுக்கு தீர்வுகைளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களையே முன்னெடுத்து வருகின்றோம்.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் உரிமை என்பது ஒரு கண்ணாக இருந்தால் அபிவிருத்தி என்பது மறு கண்ணாக இருக்க வேண்டும். உரிமையுடன் கூடிய அபிவிருத்தி சார்ந்த அரசியலைக் கட்டமைப்பதன் ஊடாக மாத்திரம் தான் எமது சமூகத்தின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த அடிப்படையிலேயே இந்த நாட்டில் ஏனைய சமூகங்களும் பயணிக்கின்றன. எனவே நாமும் அவ்வாறு உரிமை மற்றும் அபிவிருத்தி என்ற இரண்டையும் ஒருசேர முன்னெடுத்துச் செல்ல வேண்டும்” – என்றார்.



# பொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் அரசு சந்தைக்குச் சென்றே பார்க்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



**"எந்தவிதமதிப்பீட்டுநடவடிக்கையையும்மேற்கொள்ளாமலே அரசாங்கம் வற் வரி அதிகரிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இது பாரதூரமான பிரச்சினையாகும்."**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசாங்கம் வற்வரியை நூற்றுக்கு 18 வீதத்தால் அதிகரித்திருக்கிறது. ஆனால் இந்த அதிகரிப்பால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அரசாங்கம் மக்களுக்கு முறையாகப் பதில் தெரிவிக்காமல் இருக்கிறது.

ஏனெனில் வற்வரி அதிகரிப்பு மேற்கொள்ளும்போது அதுதொடர்பாக எந்த மதிப்பீட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளாமலே இதனை அரசாங்கம் செய்திருக்கிறது.

வற் வரியை அதிகரித்த பிறகு இதுபோன்ற கணக்கெடுப்பை மேற்கொள்வது கடும் பிரச்சினைக்குரிய விடயமாகும். வற் வரி அதிகரிப்பதற்கு முன்னர் இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக மதிப்பிட்டு ஆராய்ந்த பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வற் வரி உயர்வால் கிராமப்புற, நகர்ப்புற மற்றும் தோட்டப்புற சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசாங்கம் தற்போது கணக்கெடுப்பு நடத்துவது ஆச்சரியமாக உள்ளது.

முறையான நிதி நிர்வாகத்தில் வரிகளை விதிக்கும் அல்லது அகற்றும் முன் நிதி தாக்க மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கம் இவ்வாறானதொன்றை முன்னெடுக்கவில்லை.

அத்துடன், வற் வரி அதிகரிக்கப்பட்டபோது பொருள்களின் விலை அதிகரிக்கப்படவில்லை என அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் சந்தையில் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்துக்கு தெரியாமல் இருக்கிறது.

அதனால் சீனி, பருப்பு, மிளகாய், கீரி சம்பா, சம்பா போன்றவற்றின் விலை எவ்வாறு உயர்ந்துள்ளது என்பதை சந்தைக்குச் சென்று ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." – என்றார்.



# கிழக்கில் மூன்று கல்வி வலயங்களில் பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கா!

## வெள்ளம் காரணமாக இனி 16 இல்தான்!

(கே.எ.ஹமீட்)

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் மற்றும் தொடர் மழை, வெள்ளம் காரணமாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மத்தி, சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய மூன்று கல்வி வலயங்களுக்கே இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு, இந்த நாள்களுக்கு பதிலாக இம்மாதமே பதில் கல்விச் செயற்பாடுகள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய வலயங்களைப் போல இந்த வலயங்களின் பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காக மூடப்பட்டு இன்று திறக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் 16ஆம் திகதியே அவை ஆரம்பிக்கப்படும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்குக் காரணமாக – எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (16 ஆம் திகதி) அக்கரைப்பற்று வலயப் பாடசாலைகளை ஆரம்பிக்க – மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

எனவே இன்றும் நாளையும் அக்கரைப்பற்று வலயப் பாடசாலைகள் நடைபெறா என்றும், இந்த இரு தினங்களுக்கும் பதிலாக எதிர்வரும் 20 ஆம் திகதி மற்றும் 27 ஆம் திகதி ஆகிய சனிக்கிழமை நாள்களில் பதில் பாடசாலைகள் நடைபெறும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் – பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.






# பிரிட்டிஷ் இளவரசி இலங்கை வருகை

பிரித்தானிய இளவரசி ஆன் மூன்று நாள்கள் விஜயமாக நேற்றுப் பிற்பகல் நாட்டிற்கு வருகை தந்தார்.

இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவை நினைவுகூரும் வகையில், இளவரசியின் இந்த விஜயம் அமைந்துள்ளது.

பிரித்தானியாவின் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் சகோதரியான இளவரசி ஆன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்தார்.

இளவரசியுடன், அவரது கணவரான வைஸ் அட்மிரல் திமோத்தி லோரன்ஸ் உள்ளிட்ட 07 பேர் இந்த விஜயத்தில் இணைந்துள்ளார்.

இவர்களை வரவேற்பதற்கு அமைச்சர் அலி சப்ரி, சீதா அரம்பேபொல, இலங்கைக்கான பிரித்தானிய அலுவலக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்தனர்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவிமடுத்தவர்களாகவோ – மதித்தவர்களாகவோ – சட்டை செய்தவர்களாகவோ – இல்லை.

தலைவரின் கருத்தைப் பொருட்படுத்தாமல், உத்தேச திகதியில் மாநாட்டை நடத்தும் முடிவு நேற்றைய கூட்டத்தில் இறுக்கமாக எடுக்கப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதேபோல, கட்சியின் திருகோணமலை மாவட்ட நிர்வாகிகள் தெரிவை இல்லாமல் செய்து, மீண்டும் புதிய நிர்வாகிகள் தெரிவை உடன் நடத்த வைப்பதற்கு சம்பந்தன், அவரது பின்னணியில் மகன் மற்றும் அந்த அணியுடன் இப்போது ஒட்டியுள்ள திருகோணமலை நவம் போன்றோரின் முயற்சிகளும் சரிவரவில்லை. பாச்சா பலிக்கவில்லை.

இனிமேல் கட்சியின் புதிய தலைவராக தெரிவாகுபவரின் முடிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட நிர்வாகிகள் தெரிவு இந்த மாநாட்டுக்கு பின்னர் எப்போதேனும் நடக்க கூடும். நடக்காமலும் போகலாம். இதுதான் நிலைமை.

தமிழரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் மூவருக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு வழங்கப்பட்ட 24 மணி நேர கால அவகாசம், எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் இன்று மாலையில் காலாவதியாகும். அதிலும் மாற்றம் இருக்காது. அதுவும் அடித்துக் கூறக்கூடிய விடயம்.

தலைவர் தெரிவுக்கான தேர்தலும் மாநாடும் இந்த ஜனவரி மாத முடிவுக்கு முன்னர் ஒப்பேறுவது உறுதி. சம்பந்தன் வீட்டில் நேற்று நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பெரிய மாற்றம் எதனையும் கொண்டு வரவில்லை என்பதுதான் நிலைமை. தேர்தல் போட்டியின்றி கட்சித் தலைவர் தெரிவாகுவதற்கான வாய்ப்பு 99.99 வீதம் இல்லவே இல்லை.

நேற்றைய கூட்டத்தில் ஒரு விடயம் சுட்டப்பட வேண்டும். தமது நிலைமை – கடம் – யாது என்பதை இப்போதைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தாமே உணரும் வாய்ப்பு நேர்ந்தமைதான் அது.

கடந்த 18ஆம் திகதி திருகோணமலையில் கட்சியின் அரசியல் குழு கடைசியாக கூடியது. அப்போது திருகோணமலை மாவட்ட நிர்வாகிகள் தெரிவு குறித்து கிளப்பப்படும் ஆட்சேபம் பற்றியும் விரிவாக பேசப்பட்டது. சர்ச்சையை சமாளிப்பதற்காக அங்கு தங்களின் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டதாக கருதும் தரப்புகளுக்கு இடமளிக்கும் விதத்தில் அந்த மாவட்டத்திற்கு மேலும் ஆறு பொதுக்குழு உறுப்பினர்கள் இடத்தை அதிகமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப்படி ஒரு தீர்மானம் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவேயில்லை என்று ஒரே பிடிவாதமாக நின்றார் கட்சி தலைவர் மாவையர். ஆனால், கடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் அப்படி ஒரு தெளிவான முடிவு எட்டப்பட்டது, வெளிப்படையாக எடுக்கப்பட்டது என்று உறுதியாகத் தெரிவித்தனர்.

அதை மறுத்து நின்ற கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஒரு கட்டத்தில் 'அப்படி முடிவு எடுக்கப்பட்டு இருந்தால் எனக்கு என்ன மறதியா?' – என்று தானாகவே கேட்டாராம்.

ஒருவரும் பதில் கூறவில்லை. ஆனால், அவரைப் பார்த்து, நமுட்டுச் சிரித்துக் கொண்டனர்.

இந்தப் பத்திரிகையை – இந்தப் பத்தியை – ஒரு தடவை வாசித்து மாவை சேனாதிராஜா தன்னை புரிந்து கொள்வது நல்லது.

நேற்றைய அரசியல் குழுக் கூட்டம் தொடர்பில் இன்று ஊடகங்களில் தடல்புடலாகச் செய்திகள், விமர்சனங்கள், ஊகங்கள் எல்லாம் வெளியாகும்.

ஆனால் உறுதியான – தெளிவான – முடிவு இதுதான். தலைவர் தெரிவுக் குப் போட்டியிடும் மூவரும் ஒன்று கூடிக் கலைந்து, கதைத்து, கலந்துரையாடினாலும் மாற்றம் எதுவும் நடக்காது. தலைவர் தெரிவுக்கு தேர்தல் உறுதி. அடுத்தது வருகின்ற 21ஆம் திகதி தலைவர் தேர்வுக்கான தேர்தலும், 28ஆம் திகதி தேசிய மாநாடும் நடப்பதும் கூட உறுதியானதுதான். ஆனால் அதில் ஒரு சிறிய மாற்றம் வரக்கூடும். அது – இந்த இரண்டு நிகழ்வுகளுக்குமான திகதி மாற்றப்பட்டு இம்மாத இறுதியில் வருகின்ற வார இறுதியில் அடுத்தடுத்த நாள்களில் அவை இரண்டும் நடக்கக் கூடும்.அதுஒன்றேநடக்கக்கூடியஉச்சபட்ச மான மாற்றமாக இருக்கலாம்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை முகமூடி அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள், பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு நோக்கிச் சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளரான பஸ் சாரதி மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆழியவளை – கொடுக்கிளாயைச் சேர்ந்த தேவகுமார் என்ற குடும்பஸ்தர், உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு வாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தெரிவித்தனர்.

ஈச்சந்தீவு, நாவற்காடு பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிவானின் கட்டளைக்கு அமைவாக சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூன்று வேட்பாளர்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம், அக்கட்சியின் பெருந்தலைவரான இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில்நேற்று நடைபெற்றது.

சம்பந்தனின் வேண்டுகோளுக்கமைய திருகோணமலை மாவட்டத்தில் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளில் நடந்த குளறுபடிகளைச்சீர்செய்யாமல்தேசியமாநாட்டை நடத்தக்கூடாது எனக் கட்சியின் தற்போதைய தலைவரான மாவை சேனாதிராஜா வலியுறுத்திய போதும், கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் மாநாட்டை நடத்தியே தீர வேண்டும் என்று வலியுறுத்தியதால், பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின் அடிப்படையில், மாநாட்டை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது.

இதன்போது கூட்டத்தின் நோக்கம் தொடர்பில் மாவை சேனாதிராஜா விளக்கமளித்தார்.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்குச் சிறிய துண்டுப்பிரசுரமொன்றை வழங்கினார். அதில் 1951 முதல் 2019 வரையான தேசிய மாநாட்டு விபரங்கள், அதில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் இருந்தன. கிரமமான கால ஒழுங்கில் தேசிய மாநாடுகள் நடந்து போட்டியின்றி தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டதை அதில் தவராசா குறிப்பிட்டிருந்தார்.

சிறிதரன் – சுமந்திரன் ஆகிய இருவருமே தலைமைப் போட்டியில் யார் வென்றாலும், இணைந்துசெயற்படுவதாகக் கூறியுள்ளனர். ஆனால், கீழ் மட்டத்தில் அவ்வாறு நிலைமையில்லை. இரண்டு தரப்பு ஆதரவாளர்களும் சமூக வலைத்தளங்களில் மோதிக் கொண்டிருக்கின்றார்கள். யார் வென்றாலும், கட்சிக்குப் பாதிப்பு உள்ளது என்று தவராசா குறிப்பிட்டார்.

இதனால், மூன்று வேட்பாளர்களும் தமக்குள் பேசி ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும்தலா 2 வருடங்கள் எனப்பேசித் தீர்க்கலாம் என்று தவராசா பிரேரித்தார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பியும் இதனை ஆமோதித்தார். தலைமைப் போட்டியால் வட்டாரக் கிளைகளுக்குள் குழப்பம் நிலவுகின்றது என்று அவர் தெரிவித்தார். கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையானவர்கள் இதே கருத்தையே தெரிவித்தனர்.

இதையடுத்து, தலைமைப் பதவி போட்டியில் விட்டுக்கொடுப்புக்கள் மேற்கொள்ளலாமா என 3 வேட்பாளர்களும் கலந்துரையாடி பதிலளிப்பதாக 3 வேட்பாளர்கள் தரப்பிலும் கூறப்பட்டது. இதற்காக ஒரு நாள் அவகாசத்தை அவர்கள் கோரினர். இன்று கொழும்பில் 3 பேரும் கலந்துரையாடி தமது முடிவை அறிவிப்பார்கள்.

இதைத் தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாட்டு விபரம் பேசப்பட்டது. சம்பந்தனின் வேண்டுகோளுக்கமைய திருகோணமலை கிளைகளை மீள் தெரிவு செய்யாமல் தேசிய மாநாட்டை நடத்தக் கூடாது என மாவை சேனாதிராஜா கூறினார். ஒன்றரை வருடங்களின் முன்னர் நடந்த விவகாரத்தை இப்போது பேசுகிறீர்கள், இதற்காக மாநாட்டை தள்ளிவைக்கக் கூடாது என எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இதன்போது தெரிவித்தார்.

மாநாட்டைத் தள்ளிவைத்தால் கட்சியின் உறுப்புரிமைக்குச் சிக்கல் ஏற்படும் என்பது போன்ற காரணங்களைப் பலரும் முன்வைத்தனர். சம்பந்தனின் கவலைகளை தீர்க்க, அவர் சிபாரிசு செய்யும் 6 பேரை திருகோணமலை சார்பில் பொதுக் குழுவில் கலந்துகொள்ள அனுமதிக்கலாம் என்று மாற்று யோசனை சொல்லப்பட்டது. பெரும்பாலானவர்கள் இதை ஆதரித்ததால், திட்டமிட்டபடி தேசிய மாநாட்டை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக்கூட்டத்தின்பின்னர்ஊடகங்களிடம்கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கூறியதாவது:–

"தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கட்சி மாநாடு சம்பந்தமாகப் பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டன. தலைவர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

போட்டி இல்லாமல் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்து கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் போட்டி இடம்பெற்றால் தேர்வு எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பது குறித்து கட்சி யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாங்கள் மூவரும் ஒரு நாள் அவகாசம் கோரினோம். மூவரும் தனியே சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளோம். அதன்பின்னர் கட்சித் தலைவருக்கும், செயலாளருக்கும் முடிவு அறிவிக்கப்படும்.

இணக்கப்பாட்டுடனோ அல்லது கட்சி யாப்பின் பிரகாரமோ புதிய தலைவர் தேர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும். அதனைத் தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அச்சம் தரும் புதிய சட்ட மூலம்

சர்ச்சைக்குரியதான பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றாக புதிய வரைவு என்ற அடிப்படையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை இப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றார் நீதி அமைச்சரான கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ.

புதிய சட்டமூலமும் வழமை போல மோசமான விமர்சனங்களுக்குள்ளாகி இருக்கின்றது.

இந்தப் புதிய சட்டமூலமும் பயங்கரவாதத்தை எதிர்க்கும் சாக்குப் போக்கில் மக்களின் தகவல் மற்றும் கருத்து வெளியிடும் உரிமைகளை மீறுகின்றது எனக் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

கடந்த 45 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் மிகக் கொடூரமான - மனிதாபிமானமற்ற - மனித நாகரிகம் மற்றும் மாண்புகளுக்கு அடங்கி வராத - 'பயங்கரவாதத் தடைச் சட்டம்' சர்வதேச தேசத்தின் கண்களில் ஒரு காட்டுச் சட்டமாகவே அடையாளப்படுத்தப்பட்டு, மோசமாக விமர்சிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்தப் பயங்கரவாத தடை சட்டம் 1979 இல் ஒரு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலமாகவே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும் அடுத்த ஆண்டில் அது பின்னர் நிரந்தர ஏற்பாடுகள் சட்டமூலமாக்கப்பட்டது.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டில்தனித்துவஉரிமைகளைக்கோரிப் போராடிய தமிழர்கள் மீதே கொடூரமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந்தச் சட்டம் ஏற்றுக்கொள்ள முடியாதது - மனித மாண்புகளின் அடிப்படைகளுக்கு மாறானது - என்று முழு சர்வதேசமுமே அடையாளம் கண்டு, கண்டித்திருக்கின்ற சூழ்நிலையில், அதனை - அந்தச் சட்டமூலத்தை - கைவிட வேண்டிய கட்டாயம் தென்னிலங்கை பௌத்த, சிங்கள அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அந்த அழுத்தம் காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றாகத் தான் கொண்டு வந்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முன் மொழிய வேண்டிய கட்டாயம் கொழும்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. பழைய பயங்கரவாத தடைச் சட்டத்தைப் போலவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வருவது நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகி விட்டிருக்கின்றது.

அரசாங்கம் 2023 மார்ச்சில் ஒரு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை ஒரு சாத்தியமான தீர்வாக வெளியிட்டது.

அப்படி முன்வைக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தகவல் மற்றும் வெளிப்பாட்டிற்கான மக்களின் உரிமைகளை அச்சுறுத்துவதாக விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

'பயங்கரவாதம்' என்ற விடயம் தொடர்பில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தில் பரந்த வரையறை குறிப்பாக இருப்பது கவலைக்குரியது, இது அமைதியான போராட்டங்களில் பங்கேற்பவர்களை குறி வைத்து, நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பு தடுப்பு உத்தரவுகளின் கீழ் அவர்களை சந்தேக நபர்களாகத் தடுத்து வைக்கப் பொலிஸாருக்கு அதிகாரம் அளிக்கின்றது என்று சுட்டப்படுகின்றது.

மேலும், இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தின் ஏற்பாடுகள், ஊடகங்களுக்கு எதிராக பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளமையும் கடுமையான அச்சத்தை எழுப்புகின்றது.

முன்னைய - அதாவது இப்போது நடைமுறையில் இருக்கின்ற - பயங்கரவாதத் தடைச் சட்டம் தன்னகத்தே கொண்டுள்ள, அடிப்படையில் கொடூரமான அனைத்து மோசமான அம்சங்களும் இப்போது புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்திலும் இருக்கின்றமை அவதானிக்கப்பட வேண்டும்.

இந்தப் புதிய சட்ட மூலமும் வழமை போல 'அரச பயங்கரவாதத்துக்கு' துணை போகும் சட்டமாகவே அமைந்திருப்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.



# கிழக்கில் தொடரும் மழை: குடும்பங்கள் இடம்பெயர்வு

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் குறைவடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கல் ஓயா கீழ் பிரிவிலுள்ள மக்களுக்கு வெள்ளம் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை – இங்கினியாகல சேனாநாயக்க சமுத்திரத்தின் நீர் கொள்ளளவு அதிகரித்துள்ளதால், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை சேனாநாயக்க சமுத்திரம் அதிகபட்ச நீர் கொள்ளளவை எட்டியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் கல் ஓயா பொல்வத்த, இறக்காமம், அக்கரைப்பற்று போன்ற தாழ்நிலப் பிரதேசங்களிலுள்ள மக்கள் வெள்ளம் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடும் மழை காரணமாக மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மண்மேடு சரிந்து வீழ்ந்தமையினால் பதுளை – கொழும்பு பிரதான வீதியில் ஹாலிஎல உடுவர 07ஆம் மைல்கல் பகுதி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது.

பண்டாரவளை – பதுளை பிரதான வீதியின் உடுஹ®ல் பொத்த பகுதியில் நேற்றுக் காலை மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு வீதியின் மனம்பிட்டி கல்லேல்லவுக்கு இடையிலான பகுதியும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக பொலன்னறுவை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பறங்கியாமடு மற்றும் பாலையடித்தோணா பகுதி மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாலையடித்தோணா பிரதேசத்தில் 20 குடும்பங்களை சேர்ந்த 70 நபர்கள் பாலையடிதோனா சிறி முருகன் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 11 குடும்பங்களை சேர்ந்த 20 பேர் காத்தான்குடி பதுரியா பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏறாவூர் 4 ஆம் குறிச்சி, எல்லை நகர், ஐயங்கேணி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, சவுக்கடி போன்ற பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஏறாவூர் 4 ஆம் குறிச்சியை சேர்ந்த 42 குடும்பங்களின் 54 பேர் ஏறாவூர் காட்டு மாஞ்சோலை மணிமண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 செயலகப் பிரிவுகளில் 11 செயலகப் பிரிவுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 7 ஆயிரத்து 997 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 849 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் 11 பிரதேச செயலாளர் பிரிவின் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை – கிண்ணியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மயிலத்தன்சேனை பிரதேசத்திற்கான தரை வழி போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

# வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் வளாகத்திலும் டெங்கு நுளம்புப் பெருக்கமாம்!

## சிவப்பு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது

(ந.லோகதயாளன்)

வடக்க. மாகாண சுகாதாரத் திணைக்களம் அமைந்துள்ள யாழ் பண்ணை வளாகத்திலும் டெங்கு நுளம்புப் பெருக்கம் காணப்படுவதாக சிவப்பு எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வீடுகள், பொது இடங்கள், அரச திணைக்களங்கள் அனைத்தும் சுகாதாரப் பிரிவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் யாழ் சுகாதாரத் திணைக்கள வளாகம், யாழ் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் என் பனவற்றில் நுளம்பு பெருகும் ஏதுநிலை காணப்படுகின்றதா என சுகாதார உத்தியோகத்தர்களால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகாதாரத் திணைக்கள வளாகத்திலும் நுளம்பு லாவாக்கள் காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அஸ்வெசும குடும்பங்களின் எண்ணிக்கையை 24 லட்சம் வரை அதிகரிக்க அரசாங்கம் முடிவு




அஸ்வெசும பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கையை 24 லட்சம் வரை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான யோசனை, ஜனாதிபதியின் ஆலோசனைக் கமைய அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது 14 லட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

முன்னதாக 20 லட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும கொடுப் பனவை வழங்க திட்டமிடப்பட்டிருந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளில் 60 வீதமானவை தொடர்பில் இதுவரை ஆராயப்பட்டுள்ளன என அவர் குறிப் பிட்டுள்ளார்.

இது தொடர்பான தீர்வு இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி முதல் வாரத்திற்குள் அஸ்வெசும கொடுப்பனவிற்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. இதன்போது மேலதிகமாக 4 லட்சம் பயனாளர்கள், நலன்புரி செயன்முறைக்குள் உள்ளடக்கப்ப டவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் வற் வரி உயர்த்தப்பட்ட போதிலும் கூட பொருள்களின் விலைகள் உயர்வடையவில்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் இப்படிக் கூறுகிறார்



வற் வரி அதிகரிப்பால் பொருள்களின் விலைகள் உயர்வடையவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வின் போது வற் வரி அதிக ரிப்பை தொடர்ந்து பொருள்கள் மற்றும் சேவைகளின் விலையேற்றம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில் –

“வற் வரி அதிகரிப்பை தொடர்ந்து அரிசி, பருப்பு உட்பட உணவுப் பொருள் களின் விலைகள் சடுதியாக உயர்வடைய வில்லை. குறைவடைந்துள்ளன.

வற் வரி தொடர்பில் நாடாளுமன்றம் கலக்கமடைந்துள்ள அளவுக்கு சந் தையில் கலக்கமேதும் ஏற்படவில்லை,” – என்றார்.



# வேரோடு சாய்ந்தது மரம் இரண்டு வீடுகள் சேதம்

நானுஓயா டெஸ்போட் (சீனிக்கத்தாளை) பகுதியில் மரமொன்று வேரோடு சாய்ந்ததில் இரு வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

வீடுகளின் கூரைப்பகுதி முழுமையாக சேதமடைந்துள்ள– துடன், வீடுகளுக்குள் இருந்த பொருட்களும் உடைந்துள்ளன. நேற்றுமுன்தினம் இரவு இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீடுகளுக்கு அருகாமையில் இருந்த மரமொன்று காற்றின் வேகத்தாலும் மழையின் தாக்கத்தாலும் முறிந்து வீழ்ந்துள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகளை அப்பகுதிக்குப் பொறுப்பான கிரிமிட்டி 476ஃஏ கிராமசேவகர் பார்வையிட்டார். சம்பவம் தொடர்பில் நுவரெலியா பிரதேச சபையில் கவனத்துக்கும், நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்துக்கும் அவர் கொண்டு வந்தார். அனர்த்தத்தின்போது மேற்படி வீடுகளில் எவரும் இருக்கவில்லை.

# அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக்குவதே இலக்கு!

## – ‘துடிப்பான குஜராத்’ மாநாட்டில் பிரதமர் மோடி உரை

அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதே மத்திய அரசின் இலக்கு” என்று ‘துடிப்பான குஜராத்’ சர்வதேச உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

துடிப்பான குஜராத் சர்வதேச உச்சி மாநாடு 2024, காந்திநகரில் நேற்று ஆரம்பமானது. இந்த இரண்டு நாள் மாநாட்டை தொடங்கிவைத்து உரையாற்றுகையில் பிரதமர் நரேந்திர மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

”நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. நாடு தனது 100 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும்போது அது வளர்ச்சி அடைந்த நாடாக இருக்க வேண்டும் என்பதே நமது இலக்கு. இதைக் கருத்தில் கொண்டே அடுத்த 25 ஆண்டுகளை அமிர்த காலம் என நாம் குறிப்பிடுகிறோம்.

இந்த அமிர்த காலத்தில் நடைபெறும் முதல் துடிப்புமிகு குஜராத் சர்வதேச உச்சி மாநாடு இது. இந்த மாநாட்டில், 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்று இருக்கிறார்கள்.




அவர்கள் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தின் மிக முக்கிய பங்குதாரர்கள்.

சர்வதேச சூழல் இன்று எப்படி இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருந்தும், இந்திய பொருளாதாரம் வலிமையாக இருக்கிறது என்றால், இவ்வளவு வளர்ச்சி வேகத்தைக் காட்டுகிறது என்றால் அதற்குப் பின்னால், கடந்த 10 ஆண்டுகளில் கட்டமைப்புச் சீர்திருத்தங்களில் நாம் செலுத்திய கவனம் மிக முக்கிய காரணம். இந்த சீர்திருத்தங்கள் இந்தியாவின் திறன் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தி உள்ளன.

இன்று இந்தியா உலகின் 5 ஆவது மிகப் பெரிய பொருளாதாரம். 10 ஆண்டுகளுக்கு முன்பு அது 11 ஆவது இடத்தில் இருந்தது. வரக்கூடிய ஆண்டுகளில் இந்தியா உலகின் முதல் 3 பெரிய பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும் என்று பல்வேறு மிகப் பெரிய சர்வதேச அமைப்புகள் கணித்துள்ளன. வல்லுநர்கள் தங்கள் அவதானிப்புகளை மேற்கொள்ளட்டும். ஆனால், இது நிகழும். இது எனது வாக்குறுதி.”– என்றார்.

# தமிழக அரசால் பொங்கலுக்கு சிறப்பு பரிசு






பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு அரசு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கப்படுமென அறிவித்திருந்தது.

அதன்படி, மக்களுக்கு பச்சை அரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ , முழு கரும்பு ஒன்று மற்றும் ரொக்கப்பணமாக 1000 ரூபாய் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், தமிழக அரசினால் பொங்கலுக்கான பரிசு தொகுப்பு தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தால் அரசுக்கு 2 ஆயிரத்து 436 கோடி செலவு என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் இதன் மூலம் ரேஷன் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் முகாம்களில் வசிப்பவர்கள் என 2 கோடி 19 லட்சத்து 71 ஆயிரத்து 113 குடும்பத்தினர் பயனடைவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொங்கல் பரிசு வழங்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கிவைத்தார்.

அதன்படி, சென்னை ஆழ்வார்பேட்டை டி.யூ.சி.எஸ் நியாய விலைக் கடையில் முதல்வர் ஸ்டாலின் இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

# காசாவில் மக்கள் கொடுத்த விலை அதிகம்: அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கருத்து



காசா போரில் குழந்தைகள், அப்பாவி பொதுமக்கள் கொடுத்த விலை அதிகமானது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அண்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் 3 மாதங்களைக் கடந்து தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் பிளின்கன் இஸ்ரேல் சென்றுள்ளார். இந்தப் போர் ஆரம்பித்த பின்னர் அவர் நான்காவது முறையாக இஸ்ரேல் சென்றுள்ளார். இஸ்ரேல் அரசுப் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் அவர் போர் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் இந்தச் சந்திப்பு குறித்து அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசினார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் சென்று சேர்வதை இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும். அதிலிருக்கும் தடைகளை இஸ்ரேல் நீக்க வேண்டும்.

அதேவேளையில் அப்பாவி பொது மக்களுக்கு மத்தியிலேயே ஹமாஸ் குழுவினரும் கலந்துள்ளதால் இஸ்ரேலுக்கு அது சவாலாக இருக்கிறது. நான் இஸ்ரேலியத் தலைவர்களுடனான சந்திப்பில் மனிதாபிமான அடிப்படையில் சென்றுசேர வேண்டிய உதவிகள் பற்றி பேசினேன்.

கடந்த 3 நாள்களாக இஸ்ரேலின் அண்டை நாடுகளில் இருந்து வலிமையான நற்செய்திகள் வருகின்றன. இஸ்ரேலுடன் இயைந்து வாழ விருப்பக் குரல்கள் வருகின்றன. இந்தப் பிராந்திய முழுவதுக்குமான பாதுகாப்பை உறுதி செய்யக் கூடிய முன்னெடுப்பு இது. ஒக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதலுக்குப் பின்னர் முடங்கிப் போன சமாதானப் பேச்சுகள் துளிர்விடவுள்ளன.

இஸ்ரேலும் பாலஸ்தீன நாடு, பாலஸ்தீன அரசியல் உரிமைகள் ரீதியாக இறங்கிவர வேண்டும்.” – என்றார்.

ஆனால், இஸ்ரேலின் பாதுகாப்பைக் காரணம் காட்டி இத்தகைய சமரசங்கள் நடக்காது என்று பிரதமர் பெஞ்மின் நெதன்யாகு சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

காசாவில் போர் உக்கிரத்தை இஸ்ரேல் குறைத்துவருகிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த பிளின்கன்,

“காசாவில் போர் உக்கிரமாக நடப்பதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக இஸ்ரேல் எங்களிடம் ஏதும் தெரிவிக்கவில்லை. அமைதி ஒரே இரவில் திரும்பிவிடாது.

சர்வதேச நீதிமன்றத்தில் வாதாடிய தென்னாபிரிக்கா, இஸ்ரேல் போர்க் குற்றம் புரிந்ததாகக் கூறியுள்ளது. அது ஆதாரமற்றது. ஆனால் காசா போருக்கு குழந்தைகள், அப்பாவி மக்கள் கொடுத்த விலை பெரிது.

காசாவில் 90 சதவீத மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மையால் வாடுகின்றனர். நீண்ட நாள்களுக்கு போதிய உணவு இல்லாமல் குழந்தைகள் தவிப்பது அவர்கள் வாழ்க்கையில் ஆறாத தாக்கத்தை ஏற்படுத்திவிடும். அதிக உணவு, அதிகமான குடிநீர், தேவையான அளவில் மருந்துகள், இன்னும் நிறைய அடிப்படைத் தேவைக்கான பொருள்கள் காசாவை சென்று சேர வேண்டும்” என்றார்.

# ஈக்வடரில் தொலைக்காட்சி நிலையத்தை ஆயுதமேந்திய குழு அச்சுறுத்தி முடக்கியது







ஈக்வடரில் தொலைக்காட்சி நிலையமொன்றை நேரடி ஒளிபரப்பின் போது ஆயுதமேந்திய குழு தாக்கி, ஊழியர்களை அச்சுறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்த அறிவிப்பாளர்களையும், அதில் கலந்து கொண்டவர்களையும் ஆயுதமேந்திய குழுவினர் மிரட்டுவதும், துப்பாக்கியை காட்டி பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொள்வதும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பிராந்திய ஊடக ஆய்வாளர் கருத்து தெரிவிக்கையில்,

“குறைந்தபட்சம் ஒருவருக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஈக்வடாரின் மிகப்பெரிய நகரமான குவாயாகுவில் உள்ள தொலைக்காட்சி மீதான தாக்குதலில் நேரடி ஒளிபரப்பு துண்டிக்கப்படுவதற்கு முன்பு சுமார் 15 நிமிடங்கள் ஆயுதமேந்திய குழுவின் அச்சுறுத்தல் செயற்பாடானது ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது முகமூடி அணிந்த நபர்கள், தங்களிடம் வெடிகுண்டுகள் இருக்கின்றன என கூச்சலிட்டு, தலைமையகத்திற்குள் புகுந்ததுள்ளனர்.” என்றார்.

இதேவேளை, ஈக்வடரில் உள்ள மிகப்பெரிய குற்றவாளிகள் அடைக்கப்பட்டு இருந்த சிறைச்சாலையில் இருந்து கைதிகள் தப்பியுள்ளனர் எனவும் இந்த விடயம் அந்த நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# துறைமுக அதிகார சபையின் இரண்டு கப்பல்களில் 50க்கும் அதிக எம்.பிக்களுக்கு உல்லாசப் பயணம்

(நடராசா லோகதயாளன்)

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான இரு சிறிய கப்பலகளில் ஐம்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உல்லாசப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

ஹன்சகாவா மற்றும் தியகாவுல்லா என்ற இரண்டு சிறிய கப்பல்களிலேயே ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (9ஆம் திகதி) உல்லாசப் பயணத்தை மேற்கொண்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைமுக இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர விடுத்த வேண்டு-கோளுக்கு இணங்க இலங்கை துறைமுக அதிகாரசபை இந்த இரண்டு சிறிய இழுவைப் படகுகளையும் ஒதுக்கியுள்ளதுடன் இவற்றில் சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அனைத்து உணவு மற்றும் குளிர்பானங்களும் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த உல்லாசப் பயணத்திற்கு எடுத்துச் சென்ற இரண்டு கப்பல்களும் துறைமுகத்தில் குவிந்து கிடக்கும் மணலை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு காப்புக் கப்பல்கள் எனவும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐம்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த இன்பப் பயணத்திற்காக துறைமுக அதிகாரசபை 25 லட்சம் ரூபாவிற்கு மேல் செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுக இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவினால் தயாரிக்கப்பட்ட இந்த இன்பப் பயணத்திற்கு தேவையான உணவு, பானங்கள் மற்றும் பொருள்களின் பட்டியலை வழங்குமாறு 8ஆம் திகதி துறைமுக அதிகார சபையின் தலைவரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடிதத்தின் படி, சீஸ் சாண்ட்விச்கள், வெண்ணெய் கேக், ரோல்ஸ், ஐஸ் காபி, பேப்பர் கப், சிறிய கண்ணாடி, கரண்டி மற்றும் முட்கரண்டி, சிறிய தட்டுகள், நாற்காலிகள் (கவர்களுடன்) ஒவ்வொரு வகையிலும் 55, 60 தண்ணீர் பாட்டில்கள், 5 டிஷ்யூ பாக்கெட்டுகள், 10 நாற்காலிகள் மற்றும் மேசைகள் கொண்ட கூடாரமொன்று கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த கடிதத்தில் எம்.பி.க்களுக்கு உணவு வழங்க 5 துறைமுக ஊழியர்களைஏற்பாடுசெய்யுமாறுகோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பயணத்திற்கு பயன்படுத்தப்பட்ட துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான இரண்டு கப்பல்களும் டிசம்பர் 13 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளன.

புத்தாண்டின் ஆரம்பத்திற்காக அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தயார்படுத்தப்பட்ட கொழும்பு துறைமுக வளாகத்தின் குறுகிய கடற்படை சுற்றுப்பயணத்தில் பங்குபற்றிய ந்ளாட்ன்றா உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தனித்தனியாக அழைப்பிதழ்களை வழங்கியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

# கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை தலைவராக சட்டத்தரணி இராஜதுரை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் நியமனம்

பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிரமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி பி. இராஜதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் இதற்கான நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தவிசாளரான பி. இராஜதுரை, முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.





# யாழ் பல்கலையில் நேற்று மலையக தியாகிகள் தினம்

- எஸ்.நிதர்ஷன் -

மலையக தியாகிகள் தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாக மாணவர்களால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பிரதான பொது துபியில் தியாகிகள் தின நினைவேந்தல் நடைபெற்றது.

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்து இறந்தவர்களை நினைவுகூர்ந்து மலையக தியாகிகள் தினம் அனுஷ்டிக்கபட்டு வருகின்றது.

இவ்வாறு உயிர்நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து, அகவணக்கம் செலுத்தி, மலரஞ்சலி செய்து, ஈகைச் சுடர் ஏற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நினைவேந்தலில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# போதைப் பொருளை எடுத்துச் சென்ற மூவர் சிவனொளிபாதமலையில் கைது!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நாட்டில் இதுவரை அடையாளம் காணப்படாத கஞ்சா கலந்த போதைப் பொருளை எடுத்துச் சென்ற மூவர் சிவனொளிபாத மலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் நல்லதண்ணி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மலையேறும் போது போதைப் பொருள் பாவனையுடன் சிலர் செல்கின்றனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் மூவரை சோதனையிட்டபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளையிலிருந்து சிவனொளி பாதமலைக்குத் தரிசனத்துக்குச் சென்ற நிலையில் 30-40 வயதிற்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.





# சேனநாயக்கா சமுத்திரத்தின் வான் கதவுகள் மீண்டும் நேற்றுக் காலையில் திறக்கப்பட்டன

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை, இங்கினியாகல சேன நாயக்கா சமுத்திரத்தின் வான் கதவுகள் நேற்று புதன்கிழமை காலை மீண்டும் திறக்கப்பட்டன.

இதனால் கரையோரப் பகுதிகளில் வெள்ளம் பரவுகிறது.

110 அடி உயரம் உள்ள இந்த அணைக்கட்டில் 108.4 அடி உயரத் துக்கு நீர் நிரம்பி உள்ளது.

7 லட்சத்து 70 ஆயிரம் ஏக்கர் அடி நீரைக் கொள்ளக் கூடிய சேனநாயக்கா சமுத்திரத்தில் தற்பொழுது 7 லட்சத்து 38 ஆயிரம் ஏக்கர் அடி நீர் நிரம்பி யுள்ளது.

இதனால் மீண்டும் 5 வான் கதவு களினூடாக ஐந்தரை அடி வெள்ளம் திறந்து விடப்பட்டது.

மொனராகலை, பதுளை, அம்பாறை மாவட்டங்களில் பெய்து வரும் அடை மழை காரணமாக அதன் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால் அந்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளைத் திறந்து மேலதிக நீரை வெளியேற்று வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஆகியோர் தகவல் வெளி யிட்டுள்ளனர்.

சேனநாயக்கா சமுத்திரத்திலி ருந்து வெளியேறும் ஒரு பகுதி நீர் கல்லோயா வலது கரை பாதாகொடை ஊடாக தமணை, மலையடிக்குளம், எட்டாம் கட்டை சந்தி மற்றும் அக்க ரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக் கோவில் பிரதேச செயலகப் பிரிவுகளி லுள்ள கால்வாய்கள், வயல்கள் ஊடாக வந்து சம்புக்களப்பு, பட்டியடிப்பிட்டி ஆறுகளை நிறைத்து, அக்கரைப்பற்று முகத் துவாரங்கள் ஊடாக கடலை நோக்கிச் செல்லுகின்றது.

மற்றையது கல்லோயா இடது கரை ஊடாக வெளியேறுகிறது. இது சம்மாந் துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஆறுகள் குளங்களை நிரப்பி களியோடை ஆறு மற்றும் மாவடிப்பள்ளி ஆறு போன்ற பகுதிகளூடாகக் கடலை சென்றடை கிறது.

இதனால், பொது மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும், இந்தப் பகுதிகளிலுள்ள கால்நடைகளை வேறு இடங்களுக்கு மாற்றுமாறும், இப்பிர தேசங்களிலுள்ள ஆறுகள், குளங்களில் நீராடுவதை தவிர்க்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெள்ள நீரால் அடித்துச் செல்லப்படும் முதலைகள் மக்கள் வசிப் பிடங்களுக்கு வரும் அபாயமுள்ள தால் அது தொடர்பிலும் அவதான- மாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள் ளது.



# தம்பலகாமத்தில் வீடுகளுக்குள் வெள்ளம்!

-ஹஸ்பர்-

கனமழை காரணமாக தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதிக்கு உட்பட்ட தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

தொடர்ச்சியான அடை மழை காரணமாக பாலம்போட்டாறு, பத்தினி புரம், இக்பால்நகர் உள்ளிட்ட பகுதி களில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அன்றாட இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

கந்தளாய் குளத்தின் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் நீர் அதிகமாக வெளியேறி வருகின் றது.



# அம்பாறை மாவட்டத்தில் அடைமழையினால் 14,827 குடும்பங்களின் 46,317 பேர் பாதிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இம்மாவட்டத்தின் சேனநாயக்க சமுத்திரத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டு துரித கதியில் நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் அம்பாறை மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்கள் மிகுந்த ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.றியாஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில தினங்களாக அம்பாறை, மொனராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக இச்சமுத்தரத்தின் 110 அடி கொள்ளளவின் 109.5 அடி நீர் தற்போது நிறைந்துள்ளது.

அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14,827 குடும்பங்களைச் சேர்ந்த 46,317 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ள நிலைமை காரணமாக இம்மாவட்டத்தில் 36 வீடுகள் பகுதியளவில் சேதடைந்துள்ளன. இரு வீடுகள் முற்றாக சேதடைந்துள்ளன. பலத்த மடையுடனான காலநிலை காரணமாக வீடுகளில் வெள்ள நிலமை ஏற்பட்டுள்ளதால் 2,993 குடும்பங்களைச் சேர்ந்த 9,169 பேர் தமது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் அம்பாறை மாவட்டத்தில் அதிகளவிலான மழை வீழ்ச்சி

றூபஸ் குளம் பகுதியில் பதிவாகியுள்ளது. அங்கு 157.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அம்பாறை மாவட்டத்தில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாவட்டத்தின் அம்பாறை பகுதியில் 139.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தீகவாபி பிரதேசத்தில் 120.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பொத்துவில் பிரதேசத்தில் 110.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இங்கினியாகல பிரதேசத்தில் 101.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பகுதியில் 97.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள அச்சுறுத்தலை கருத்தில்கொண்டு நேற்று முதல் தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் 2024 ஜனவரி 16 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்தார்.

இதுதவிர, அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளுக்கும் சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் 15ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.















# கென்னடி விஜயரத்தினத்தின் நினைவேந்தல் நேற்று யாழில்

-எஸ்.நிதர்ஷன்-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினத்தின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் கொக்குவிலில் அமைந்துள்ள மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நேற்றைய தினம் கெனடியின் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினத்தின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவு உரைகளும் இடம்பெற்றிருந்தன.

இவ் நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# காரைதீவு எங்கும் வெள்ளக்காடு!

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த சில நாள்களாக பொழிந்த கனமழையை அடுத்துக் காரைதீவு மாவடிப்பள்ளி, அம்பாறை பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது.

நேற்றும் முன்தினமும் வாகனங்கள் சிரமத்துக்கு மத்தியில் பயணித்தன.

காரைதீவு இராணுவ முகாம் ஊடாக விபுலானந்தா கலாச்சார மண்டபத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது. அங்கும் பயணிகள் சிரமத்துக்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடற்றொழில் மற்றும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

# பண்டாரவளை - பதுளை வீதியில் மண்சரிவால் 4 வாகனங்கள் சேதம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பண்டாரவளை – பதுளை பிரதான வீதியில் உடுஹுல்பொத்த எனும் இடத்தில் திடீரென்று மண்மேடு சரிந்து விழுந்ததில் 4 வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

இச் சம்பவத்தின் போது இரு வாகனங்கள் முழுமையாக மண்ணில் புதையுண்டும், இரு வாகனங்கள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும், எனினும் எந்தவித உயிர்ச் சேதமும் இதுவரை பதிவாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# டைனமட்டை இடுப்பில் கட்டி வெடிக்க வைத்து உயிரை மாய்த்த நான்கு பிள்ளைகளின் தந்தை




(ஹஸ்பர் ஏ.எச்.)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழு புளியடி மீள்குடியேற்ற கிராமப் பகுதியில் நேற்றுக் காலை 6.39 மணி அளவில் டைனமட் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்து உள்ளார்.

பெரிய கிண்ணியா கட்டையாறு பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய ஜுனைதீன் ரபாய்தீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஏழு புளியாளியில் வசித்து வந்த இவரின் மனைவி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக குவைத்துக்குச் சென்று ஒன்றரை வருடங்களின் பின் மீண்டும் வீடு திரும்பி உள்ளார்.

வெளிநாட்டில் இருந்து வந்து ஐந்து நாள்களேயான நிலையில் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள், வாய்த் தர்க்கங்கள் ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்த மனைவி தனது கணவனை அன்புடன் வாழ விருப்பமில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக மனம் சோர்வுற்ற கணவன் வெடித்துச் செத்துப் போவேன் எனப் பலரிடம் கூறியுள்ளார்.

கூறியபடியே நேற்றுக் காலை 6.30 மணிக்கு தனது இடுப்பில் வெடிக்கும் டைனமட் பொருளைக் கட்டிக் கொண்டு வெடித்து உயிரிழந்து உள்ளார்.

இறந்தவரின் சடலம் ஏழு புளியடி மேல் குடியேற்ற கிராமத்தில் நேற்று வைக்கப்பட்டிருந்தது

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்!

## ஆசிய இணையக் கூட்டணி வலியுறுத்தல்

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசாங்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி நிகழ்நிலை காப்பு சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தயாராகின்றது.

மக்களின் தகவலறியும் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமை என்பவற்றுக்கு இதன் மூலம் அழுத்தம் ஏற்படுவதாக பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த சட்டமூலம் திருத்தப்பட வேண்டும் என உலகின் பிரபல இணைய சேவைகளை உள்ளடக்கிய ஆசிய இணைய கூட்டணி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு அறிவித்துள்ளது.

கடந்த 08 ஆம் திகதி நீண்ட கடிதமொன்றை அவ்வமைப்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

“இலங்கையின் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். இது விரிவாக திருத்தப்பட வேண்டும்.

உத்தேச சட்டமூலம் தற்போது காணப்படும் விதத்திலேயே அமுல்படுத்தப்பட்டால், பல விளைவுகள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

சட்டமூலத்தில் தடை செய்யப்பட்ட கருத்து என சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயத்தினூடாக சட்டபூர்வமாக கருத்து தெரிவிப்பதற்கு இருக்கும் சந்தர்ப்பம் ஓர் குற்றமாகக் காண்பிக்கப்படும்.

கருத்து தெரிவிப்பதற்கு இருக்கும் உரிமை இதனூடாக தடுக்கப்படலாம்.

சட்டமூலத்தில் காணப்படும் சில தவறுகள், தற்போது காணப்படும் சட்டங்களினூடாகவும் தவறு என குறிப்பிடப்பட்டுள்ளதால், மீண்டும் மீண்டும் அதற்கு பொருள் கோடுவது சட்டபூர்வமான பிணக்குகளை ஏற்படுத்தும் என்பது ஆசிய இணைய கூட்டணி உண்மைக்கு புறம்பான மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் கருத்துகளை குற்றம் என கருதுவது , கருத்து தெரிவிக்கும் உரிமைக்கு விடுக்கப்படும் ஓர் தடை.

இந்த சட்டமூலத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள ஆணைக்குழு ஊடாக அரசியல் தலையீடுகளும் அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தும் சம்பவங்களும் இடம்பெறலாம்.

அதிகளவில் வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பதனூடாக தற்போது இலங்கையில் கட்டியெழுப்பப்படும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு அல்லது முதலீடுகள் உள்ளிட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் சர்வதேச மனித உரிமைகள் விதிமுறைகளுக்கு ஏற்ப மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைய விதிமுறைகளுக்கு ஏற்ப மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.” என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.01.2024




இன்று சுமாரான செயல்களே நடை பெறும் சூழ்நிலை காணப்படும். உங்க ளுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பல–ன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவை யற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகை களை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகு முறை தேவை. திட்டமின்றி செயலாற்றி னால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக் காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள் வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர் கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற் கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கை யும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள் வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப் படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந் தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படா தீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலை களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதக மான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப் படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல் லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக் காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத் துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமா னம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 11.01.2024

## தனுசு

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.

## கும்பம்

இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

## மகரம்

இன்று பக்குவமாகவும் புத்திசாலித் தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

## மீனம்

இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# 70 கிலோ கஞ்சா நேற்று உரும்பிராயில் சிக்கியது





(ந.லோகதயாளன்)

உரும்பிராயில் நேற்று விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 70 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அந்தக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மாதகலைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் மாதகல் கடற்கரை ஊடாக அது எடுத்து வரப்பட்டதாகக் கூறப்படும் பகுதியிலும் அதிரடிப் படையினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

# ‘பயங்கரவாதி’ நாவல் அறிமுகவிழா நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில்






- எஸ்.நிதர்ஷன் -

ஈழத்து எழுத்தாளரும், யாழ் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான தீபச்செல்வனின் ‘பயங்கரவாதி’ நாவல் அறிமுகவிழா நேற்றுப் புதன்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு மாணவர் ஒன்றியத் தலைவர் கே. துவாரகன் தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராமும், சிறப்பு விருந்தினராக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி. கணேசலிங்கமும் கலந்துகொண்டனர்.

நாவல் விமர்சனத்தை சைவசித்தாந்தத் துறையை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் வழங்கினார்.












# வடக்கு ஆளுநரை நேற்று சந்தித்தார் கனடாத் தூதர்

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கனடாவிலிருந்து வருகை தரும் பலர் வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றமை தொடர்பில் ஆளுநர் தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். நாட்டில் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்த தன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள் எட்டப்படும் என ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள பசுமை சக்திவளத் திட்டங்கள், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



# இந்தியத் துணைத்தூதுவரும் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

நாகபட்டினத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பித்தல், பலாலி விமான நிலைய அபிவிருத்தி நடவடிக்கைகள், சுற்றுலாத் துறை அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.





# வடக்கில் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இணையதளங்கள் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ இணையதளங்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் இந்த இணையதளங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

வேலணை, வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேச சபைகளுக்கும், பருத்தித்துறை நகர சபைக்குமான உத்தியோகப்பூர்வ இணைய தளங்களே அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டன.

மக்களுக்காக சேவை புரியக்கூடிய உள்ளூராட்சி நிறுவனங்கள் இவ்வாறு உத்தியோகபூர்வ இணையத் தளங்கள் ஊடாகத் தங்களின் பணிகளை மேற்கொள்ள எடுத்துள்ள முயற்சிக்கு ஆளுநர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் பொதுமக்கள் தங்களுக்கான சேவைகளை இணையத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளையும், வரி உள்ளிட்ட கட்டணங்களையும் இணையதளத்தினூடாக செலுத்துவதற்கான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும் என ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இதன்போது அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களின் தனித்துவத்தையும் பேண முடியும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

ஆளுநரின் ஆலோசனைகளை செவிமெடுத்த அதிகாரிகள், அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இணையத்தளத்தில் மேலும் தரவுகளை இணைத்து மக்கள்நேயப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பார்கள் எனத் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இன்றைய நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.







